(3) PERSONAL EXPLANATON *re* STATEMENT OF THE HON. THE MINISTER FOR FINANCE DURING THE HALF-HOUR DEBATE ON 10TH MAY 1954. *re* STATIONING OF SPECIAL ARMED POLICE IN TANJORE DISTRICT.

SRI M. KALYANASUNDRAM :—" Sir, I rise on a point of personal explanation. " கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சாவூர் ஜில்லாவில் **Special Armed Police** வைத்திருப்பது குறித்து நேற்று நடந்த விவாதத்திற்கு கனம் மந்திரி அவர்கள் பத்து நிமிஷம் பதில் கூறினார். அதிலே ஒன்பது நிமிஷம் கட்சி பிரசாரத்தைப்பற்றி பேசினார். இந்த ஒரு நிமிஷம் தான் சொன்னார்கள். வள்ளுவக்குடி சம்மந்தப்பட்ட வரையில் என்னென்ன குற்றச்சாட்டுகள் எழுதி அனுப்பினார்கள். விசாரணைக்கு என்னென்ன எடுக்கப்பட்டிருக்கின்றன. என்பதை விளக்க வேண்டும். நேற்று சொல்லும் காலத்தில் இது பரிசீலனைக்கு வரும் என்று நினைத்தோ அது இதுவரையிலும் வருவதாயில்லை. ஆனால் குற்றச்சாட்டை இன்றைக்கு அறிவிக்கப்பட்டுள்ள முறையில் சொன்னார்கள். அன்றைய தினம் என்னென்ன குற்றச்சாட்டுகள் கலெக்டரிடம் வந்தது. என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள். குறிப்பாக என்னென்ன எழுதி இருக்கிறார்கள் என்பதுமல்லாமல், அங்கத்தினர் ராமலிங்கம் மற்ற அங்கத்தினர்களும் இதைப்பற்றி என்ன எழுதி அனுப்பியுள்ளார்கள் என்பதையும் விளக்க வேண்டும்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I did not make any mis-statement with reference to the petition or representation made by the hon. the Deputy Leader of the Opposition. I wanted instances of specific charges against the Police which could be enquired into. The communication sent to me referred to some incidents which happened with reference to the Collector. It was immediately forwarded to the Collector and action is being taken with reference to it. With reference to the Police, there was merely a general statement in the communication that there were Police excesses at Valluvakudi. No specific instances had been stated in that petition. Even now, I told the hon. the Deputy Leader of the Opposition when he pointed out this petition that unless specific instances are pointed out to me, it will not be possible to hold any enquiry on a general charge. Therefore, what I stated was quite correct and even now I say no instances of specific incidents have been brought to my notice."

IV.—HALF-HOUR DEBATE *RE* EMPLOYMENT OF EX-TRAMWAYMEN IN THE CITY TRANSPORT AND RESUMPTION OF MADRAS TRAMWAYS.

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, டிராம்வேக்கள் நிறுத்தப்பட்டதினால் பொதுமக்களுக்கு பல
12-40 p.m. விதமான தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கம்பெனியில் வேலை செய்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட தினத்திலிருந்து மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருப்பதும், பொது மக்களும் மலிவான போக்குவரத்து சாதனமின்றி கஷ்டத்திற்குள்ளாகியிருப்பதும் எல்லோரும் அறிந்த விஷயம். இப்போது இந்த விஷயத்தை விவாதத்திற்கு எடுத்ததின் நோக்கங்களில் ஒன்று ஏழைத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதுதான். கனம் முதல் மந்திரி அவர்கள் இதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதின்பேரில்தான் இந்த அரை மணி விவாதத்தை ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இதை அனுமதித்ததற்கு தங்களுக்கு வந்தனம் செய்ய கடமைப்பட்டுள்ளோம்."

THE HON. SRI B. PARAMESWARAN :—" The half-hour debate was conceded only in regard to the question whether the